இந்தியன் வங்கி

# Indian Bank

உங்கள் தொழில் நுட்பநேய வங்கி

6வது வருடாந்திர பொதுக்குழுவில் ஆற்றிய உரை




## T M பாசின்

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்

நாள் : ஜூன் 29, 2012 நேரம் : காலை 10 மணி

இடம் : இமேஜ் ஆடிடோரியம்

இராஜா அண்ணாமலை புரம், சென்னை - 600 028

# 6வது வருடாந்திர பொதுக்குழுவில் ஆற்றிய உரை

அன்புள்ள பங்குதாரர்களே,

இந்தியன் வங்கி இயக்குநர் குழு சார்பாகவும் என் சார்பாகவும் இந்தியன் வங்கியின் ஆறாவது ஆண்டு பொதுக்குழு கூட்டத்திற்கு வந்திருக்கும் உங்கள் அனைவரையும் வரவேற்கிறேன்.

மாட்சிமை மிக்க இக்கூட்டத்தில் உங்கள் வங்கியின் 2011-12 ஆண்டுக்கான முக்கிய செயல்பாடுகளை உங்கள் முன் வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

உங்கள் வங்கி மற்ற வங்கிகளை விட பல முக்கிய வரையறைகளில் முன்னிலையில் உள்ளது என்பதை தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

1. சொத்துக்களின் ஈட்டு விகிதம் (ROA) 1.31%
2. வர்த்தகத்தில் இயக்க லாப விகிதம் (OP to Business) 1.64%
3. வர்த்தகத்தில் நிகர லாப விகிதம் (NP to Business) 0.83%
4. வருமானத்தில் செலவு பங்கு (பணியாளர்கள் செலவுக்கும், பிறசெலவுக்கும்) (Cost to Income) 38.71% மற்றும்
5. மொத்த வாராக் கடன் 2.03% என்பது வங்கிகளின் சராசரி 3% ஐ ஒப்பிடும் போது சிறந்ததாகும்.

உங்கள் வங்கி பல ஆண்டுகளாக ஈட்டிய லாபத்தை தேக்கி முதல் அடுக்கு (Tier I) மூலதனத்தை அதிகரித்து கடன் வளர்ச்சியை எதிர் கொண்டது. முதல் அடுக்கு மூலதனம் 11.13% என்பது வங்கிகளிடையே அதிக பட்சமாகும். உங்கள் வங்கியின் CRAR 13.47% என்பதாலும், முதல் அடுக்கு மூலதனம் சிறப்பாக உள்ளதாலும் அரசாங்கத்திடம் உங்கள் வங்கி மூலதனம் கோரவில்லை. ஆதலால் 31.3.2011ல் ₹ 184.44 ஆக இருந்த வங்கி பங்கின் புத்தக மதிப்பு ₹ 214.94 ஆக உயர்ந்துள்ளது.

வங்கிகளின் செயல்பாட்டை அடிப்படையாக கொண்டு தரம் நிர்ணயிக்கும் ஸ்டாண்டார்டு & புவர் மற்றும் ஃபிட்ச் (S & P & FITCH) நிறுவனங்கள் இந்திய நாட்டுக்கு வழங்கிய உறுதித் தரத்தை உங்கள் வங்கிக்கு வழங்கியுள்ளது.

இயக்குநர்களின் அறிக்கை மற்றும் 31.3.12 க்கான தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு இறுதிக் கணக்கும் உங்களுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளதால் அதை நீங்கள் படித்து விட்டதாக உங்கள் அனுமதியுடன் எடுத்துக் கொள்கிறேன்.

கனவான்களே, பெருமாட்டிகளே முதலில் சமீபத்திய நிகழ்வுகள் எவ்வாறு பொருளாதாரம் மற்றும் நிதித்துறை அமைப்புகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை உங்களிடம் கூற விரும்புகிறேன்.

**உலகப் பொருளாதார நிகழ்வுகள்**

கடந்த நிதியாண்டில் (2011-12) உலகப் பொருளாதாரம் ஐரோப்பிய குழுமத்தின் அங்கத்தினர் நாடுகளின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டது. ஐரோப்பிய மத்திய வங்கி, இப்பொருளாதார சரிவை சரிகட்ட, அதிக அளவில் பணப்புழக்கத்தை செய்தும் அது ஒரு தற்காலிக ஏற்பாடாக அமைந்ததே தவிர ஐரோப்பிய குழுமத்தின் அங்கத்தினர் நாடுகளின் கடன் பிரச்சனை மற்றும் அந்நாட்டு வங்கிகளின் ஸ்திரத்தன்மை முழுமையாக தீர்க்கப்படவில்லை.

இதன்பாதிப்பு வளர்ந்த பொருளாதார நாடுகளையும், வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளையும் தாக்கியதால் அந்நாடுகளின் பொருளாதாரம் தடுமாறத் தொடங்கியது. இதன் விளைவாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடுகளுக்கு குறைவான அந்நிய முதலீடு வந்தது.

இந்த நிகழ்வுகளுடன் ஒப்பிடும் போது அமெரிக்கப் பொருளாதாரம் பரவாயில்லை. ஆனால் அங்கேயும் வேலையில்லாத் திண்டாட்டம், குறைந்த அளவு நுகர்வோர் செலவினங்களும் சந்தையின் உளப்பாட்டையும் பொருளாதாரத்தை குறித்த எதிர்பார்ப்புகளைப் பாதித்துள்ளது.

வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் மிதமாகியுள்ளது. மந்தமான உலக வளர்ச்சி பொருட்களின் விலையை குறைத்து இடரை தவிர்க்கும் மனப்பாங்கு, குறைந்த அந்நிய முதலீடு, என இந்தியாவையும் சேர்த்து வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை பாதித்துள்ளது. இதனால் உலகின் மொத்த உற்பத்தி 2012ல் 2.5% அதிகரித்து 2013ல் 3% வளர்ச்சி இருக்கும் என உலக வங்கியின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.


**இந்தியப் பொருளாதாரக் கண்ணோட்டம்**

குறைந்த வளர்ச்சி பணவீக்கம் சார்ந்ததாகத் தோற்றமளிக்கிறது. கடந்த நிதியாண்டில் 6.5% வளர்ச்சி கண்டிருந்தாலும் கடந்த காலாண்டில் 5.3% வளர்ச்சி, 2010-11ல் 8.4% வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவு.


கோரல் தரப்பில் குறைந்த முதலீடும், அளித்தல் தரப்பில் தொழிற்சாலைகளின் குறைந்த உற்பத்தியும், வளர்ச்சியைக் குறைத்துள்ளன. மொத்த விலைக்குறியீடு மே 2012ல் 7.55%ம் ஏப்ரல் 2012ல் 7.23% இருந்தது. உணவு மற்றும் எரிபொருள் சார்ந்த பணவீக்கம் 10 சதவீதத்திற்கு மேல் இருந்தது. ஒரே ஆறுதலான விஷயம் உணவு சாரா உற்பத்திப் பொருட்களின் பணவீக்கம் குறைந்ததுள்ளது. வங்கிகளைப் பொறுத்த வரையில் 01.06.2012ல் மொத்த டெபாசிட்டுகள் 14.4%ம், மொத்த கடன்கள் 18.3% வளர்ச்சி கண்டுள்ளது. கடந்த ஆண்டு டெபாசிட்கள் 17.4%ம், கடன்கள் 19.3% வளர்ச்சி கண்டன.

ரூபாயின் நாணய மதிப்பு, முதலீடுகள் இல்லாததும், தொழிற்சாலைகளின் குறைந்த உற்பத்தியும், அரிதான பணமும், ஏற்றுமதி, இறக்குமதி வித்தியாசத்தில் உள்ள எதிர்மறையும், மொத்த உற்பத்தி குறியீட்டை நடப்பு முதல் காலாண்டில் பாதிக்கும்.

இந்தப் பின்னணியில் உங்கள் வங்கியின் 2011-12க்கான செயல்பாடுகளைச் சமர்ப்பிக்கிறேன்.





வங்கியின் மொத்த வர்த்தகம் ₹ 200000 கோடியைத் தாண்டி ₹ 211988 கோடியை எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது 16.8%அதாவது ₹ 30458 கோடி வளர்ச்சியாகும். டெபாசிட்கள் 14.2% அதாவது ₹ 15000 கோடி வளர்ச்சி கண்டு ₹ 120804 கோடியையும் கடன்கள் 20.4% வளர்ச்சி அதாவது ₹ 15485 கோடி வளர்ச்சி கண்டு ₹ 91184 கோடியை எட்டியுள்ளது.



கடந்த ஆண்டு உங்கள் வங்கியின் இயக்கலாபம் ₹ 3292 கோடியிலிருந்து 5.2% வளர்ச்சி கண்டு ₹ 3463 கோடியாக உயர்ந்துள்ளது.

நிகரலாபம் கடந்த ஆண்டு ₹ 1714 கோடி ஆக இருந்தது. இந்த ஆண்டு ₹ 1747 கோடியாக உயர்ந்துள்ளது.




ஒரு ஊழியருக்கான வர்த்தகம் ₹ 930 லட்சத்திலிருந்து ₹ 1114 லட்சமாக உயர்ந்துள்ளது.

உங்கள் வங்கியின் சொத்துக்களின் ஈட்டு விகிதம் 1.31% என்பது வங்கிகளிடையே மிக உயர்ந்த சதவிகிதம்.

நிகர வட்டி 3.43%

வருமானத்தில் செலவு பங்கு (பணியாளர்கள் செலவுக்கும், பிறசெலவுக்கும்) 38.7%


நிகர மதிப்பு மீதான ஈடு (RoE) நடப்பு நிதியாண்டில் 18.73% வங்கி பங்கின் புத்தகமதிப்பு ₹ 184.44 லிருந்து ₹ 214.94 ஆக உயர்ந்துள்ளது.

ஒரு பங்கின் வருமானம் ₹ 38.57லிருந்து ₹ 39.57 ஆக உயர்ந்தள்ளது.

வாராக்கடன்களுக்கான முற்சேகரம் 70.13%


நிகரமதிப்பு ₹ 9637 கோடியாக அதிகரித்ததால் CRAR (BASEL IIன் படி) 13.47% ஆக உள்ளது.

உங்களது வங்கியால் ₹ 7546 கோடிக்கான இரண்டாம் அடுக்கு பத்திரங்களாக முதலீடு வெளியிட இயலும்.




சமூகத்தின் அடித்தட்டில் உள்ளவர்களின் சமூகப் பொருளதார மேம்பாட்டிற்கு உதவுவதை தன்னுடைய நோக்கமாக கொண்டுள்ள உங்கள் வங்கி எப்போதும் போல் தன்னுடைய கடமையை செய்வதில் ஒரு பொறுப்புள்ள நிர்வாகமாக முன்னணியில் உள்ளது.

முன்னுரிமை துறைக்கான கடன்கள் ₹ 4057 கோடி அதிகரித்து ₹ 13354 கோடியாக உள்ளது. இது சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடனில் (ANBC) 41.5% ஆகும்.




விவசாயக் கடன்கள் 20.9% அதிகரித்து ₹ 13354 கோடியாக உள்ளது. இது சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடனில் (ANBC) 18.5% ஆகும்.

நடுத்தர, சிறு தொழில்களுக்கு கடனளிப்பதற்காக 72 சிறப்புக் கிளைகள் செயல்படுகின்றன. இந்தத் துறைக்கான கடன் ₹ 486 கோடி வளர்ச்சி கண்டு ₹ 10161 கோடியை எட்டியுள்ளது.

**அனைவருக்கும் வங்கிச் சேவை (Financial Inclusion)**

வங்கிச் சேவை கிடைக்கப் பெறாத கிராமங்களுக்கு, வங்கிச் சேவை வழங்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வையோடு, மக்கள் தொகை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட 1522 கிராமங்களுக்கு அனைவருக்கும் வங்கிச் சேவை திட்டத்தின் கீழ் வங்கிச்சேவை இந்தியன் வங்கி அளித்துள்ளது.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள 2000த்திற்கும் மேற்பட்ட மற்றும் 2000த்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்திற்கும் பல்வேறு வகைகளில் வங்கிச் சேவை வழங்குவதற்கு, புதுச்சேரி மாநில வங்கியாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளரான இந்தியன் வங்கி வழிவகை செய்துள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக மக்கள் தொகை 2000த்திற்கும் மேற்பட்ட மற்றும் 2000த்திற்கும் குறைவான அனைத்து கிராமங்களுக்கும் வங்கிச் சேவை கிடைப்பதற்கு வழிவகை செய்த முதல் மாநிலம் என்ற பெருமை புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

**கிளைகள்**

வங்கிகள் நெருக்கம் குறைந்த, மற்றும் வங்கிகள் இல்லா இடங்களில் கிளைகளை ஆரம்பிக்கும் பொருட்டு 95 கிளைகளும் 152 தானியங்கி காசாளும் இயந்திரங்களும் நடப்பு ஆண்டில் நிறுவப்பட்டு 1955 கிளைகள்,1280 தானியங்கி காசாளும் இயந்திரங்கள், 34 விரிவாக்க கிளைகள், 23 துணைக் கிளைகள், 1 பணம் சேகரிக்கும் மையம், 66 வங்கிச் சேவை மையங்கள், 1 அந்நியச் செலாவணி துறை ஆகியவை உள்ளன.

உங்கள் வங்கிக்கு 3 வெளிநாட்டுக் கிளைகள் சிங்கப்பூர், கொழும்பு மற்றும் ஜாப்னா ஆகிய இடங்களில் உள்ளன. மற்றும் உங்கள் வங்கிக்கு 69 நாடுகளில் 188 வங்கிகளில் பரஸ்பர வங்கித் தொடர்பு உள்ளது.

**விருதுகள் மற்றும் ஒப்புதல்கள்**

உங்கள் வங்கி கடந்த காலங்களில் சிறந்த செயல்பாட்டுக்கான பல விருதுகளை பெற்றுள்ளது. நடப்பு ஆண்டிலும் கீழ்க்கண்ட விருதுகள் கிடைத்துள்ளன.

2011க்கான ஆற்றலிலும் மற்றும் ஸ்திரத்தன்மையிலும் முதல் இடம், லாபத்திலும், திறமையிலும் இரண்டாம் இடம் என பைனான்ஸியல் எக்ஸ்பிரஸ் மற்றும் எர்ன்னஸ்ட் அண்டு யங் சர்வே ஒட்டுமொத்தமாக பொதுத்துறை வங்கிகளில் மூன்றாம் இடம்.

சுயஉதவிக் குழுக்கள் (புதுமைத் திட்டம்) மற்றும் முக்கிய மேம்பாடு விளைபொருள் சேவை - தங்க மயில் விருது.

ஸ்கோட்ச் சேலஞ்சர் விருது 2012 - வங்கிச் சேவை கிடைக்கப் பெறாத அனைத்து கிராமங்களுக்கும் அனைவருக்கும் நிதிச் சேவை திட்டத்தின் கீழ் வங்கிச் சேவை கிடைப்பதற்கு தலைசிறந்த பங்களிப்பு செய்ததற்காக இந்தியன் வங்கிற்கு இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

ஸ்கோட்ச் அனைவருக்கும் நிதிச்சேவை விருது 2012 - இந்தியாவிலேயே முதன்மையாக புதுச்சேரி யுனியன் பிரதேசத்தில் 2000த்திற்கும் மேற்பட்ட மற்றும் 2000த்திற்கும் குறைவான மக்கள் தொகையுள்ள அனைத்து கிராமங்களுக்கும் வங்கிச் சேவை கிடைக்க வழிவகை செய்ததற்காக இந்த விருது அளிக்கப்பட்டுள்ளது.

டன் & பிராட்ஸ்டீரிட் வங்கி விருது 2011- சிறந்த சொத்து தரத்திற்காக பொதுத்துறை வங்கிகளுக்கான கான்பரன்ஸில் FIBAC & FICCI - IBA மாஸ்டர் விருது.

அவுட்லுக் மணி விருது 2011க்கானது சிறந்த முறையில் கல்விக் கடன் அளித்தற்காக எகனாமிக் டைம்ஸின் சிறந்த சர்வீஸ் அவார்டு பொதுத்துறை வங்கிகளில் மூன்றாவது இடம்.

பாங்கர் பத்திரிக்கை பிரசுரித்த சொத்துக்களின் ஈட்டிற்காக முதல் 150 வங்கிகளில் உங்கள் வங்கியும் ஒன்று.

**புதிய முனைவுகள்**

வாடிக்கையாளர்களின் வசதிக்காக உங்கள் வங்கி புதிய முனைவுகளை எடுத்து, கீழ்க்கண்ட புதுத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது.

கைபேசி வங்கி சேவை.

வீட்டுக்கடன் மற்றும் கல்விக்கடன் விண்ணப்பங்களை வலைதளம் மூலம் சமர்ப்பித்தல்

புதிய டெபாசிட்டுகளான இண்ட்பொனான்ஸா, இண்ட்கோல்டு மத்திய மற்றும் சிறு தொழிலுக்கான சொத்து குழுமம் - பிவாண்டி, துணி குழுமம் - பில்வாரா, செராமிக் உற்பத்தி - மோர்வி, பாஸ்டனர்களுக்கு - சண்டிகர் இந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அனைத்துக் கிளைகளிலும் பணம் பெறத்தகும் at par வங்கி வரைவுகள், வாடிக்கையாளர்களின் நிதிநிலையை வாரம் தோறும் குறுந்தகவல் (SMS) மூலம் அறிவிக்கும் வசதி.

பிளாட்டினம் மாஸ்டர் கார்ட் அறிமுகம் - வாடிக்கையாளர்களுக்கு கார்டு மூலம் பணம் செலுத்தும் வசதியுடன் வெகுமதி எண்ணிக்கைகள் - டெல்லி, சென்னை, கோயமுத்தூர் மற்றும் பெங்களூரில் காசோலை பிம்பம் மூலம் (டிரன்கேசன்) பறிமாற்றம்.

85 பயோமெட்ரிக் ATMகள்

- பாரதிய ஸ்டேட் வங்கியின் மியூச்சுவல் பண்டு யூனிட் விற்பனை

- வாடிக்கையாளரின் குறைகளைத் தெரிவிக்க 56677 எண்ணுக்கு குறுந்தகவல் அனுப்பும் வசதி.

## எதிர்காலத்திற்கான முன்னோட்டம்

அனைத்து வங்கிகளுக்கும் இந்த வருடம் மிகவும் சவாலாக இருக்கும். உலக பொருளாதாரச் சூழல் ஸ்திரத்தன்மை இழந்து காணப்படுகிறது. தொடரும் நடப்புக் கணக்கு பற்றாக்குறை மற்றும் நிதிநிலை பற்றாக்குறை கவலை அளிக்கும் விதத்தில் உள்ளன. நம்முடைய இயல்பான வலிமை, செயல்திறமை, பரந்த கிளைகளின் வலையமைப்பு மூலம் நடப்பு நிதியாண்டில் நம்முடைய வளர்ச்சியை தக்க வைத்து மேலும் வளர முடியும் என்று எதிர்பார்க்கிறோம். நம்முடைய உந்துதல் சில்லறை வியாபாரத்தை அதிகரிப்பது. இதன் மூலம் நம்முடைய வாய்ப்புகளை சிறந்த முறையில் பயன்படுத்தி சவால்களை எதிர்நோக்க முடியும்.

வளர்ச்சியின் வேகத்தை நிலைநிறுத்தி உங்கள் வங்கி சவால்களை எதிர்கொண்டு வர்த்தகத்தில் புதிய அளவினையும் சிறந்த செயல்பாட்டையும் அடையும்.


நான், இயக்குநர் குழுமம் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் இந்திய அரசாங்கம், ரிஸர்வ் வங்கி, செபி நிறுவனங்களின் வழிகாட்டுதலுக்கும், உதவிக்கும் நன்றி பாராட்டுகிறேன். நிதி நிறுவனங்களுக்கும், தொடர்பு வங்கிகளுக்கும் அவைகளின் ஆதரவிற்காக நன்றி பாராட்டுகிறேன்.

வங்கி வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் அவர்களின் வரையற்ற ஆதரவிற்கும் எங்களின் மீது கொண்ட நம்பிக்கைக்கும் நன்றி கூறுகிறேன்.

சவாலான கால கட்டத்தில் வங்கியின் வளர்ச்சிக்கும், சிறந்த செயல்பாட்டிற்கும் பொறுப்பான சேவையை சமர்பித்த, அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் இயக்குநர் குழுமம் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள



**T M பாசின்**

**29** ஜூன் 2012